# இந்தியாவில் நம்பர் - ஒன் மாநிலமாக தமிழ்நாடு திகழக் காரணம்; தி.மு.க. ஆட்சி அமைக்கும் போதெல்லாம் மக்களின் தேவைகளைப் பார்த்துப் பார்த்து நிறைவேற்றி வருவதுதான்!

## திருவொற்றியூர் அரசு விழாவில் 1,500 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கி
## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!






துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.5.2025) சென்னை, திருவொற்றியூரில் நடைபெற்ற அரசு விழாவில் 1,500 பயனாளிகளுக்கு வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், ப.தாயகம் கவி, ஆர். டி.சேகர், டாக்டர் நா.எழிலன், ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, கே.பி.சங்கர், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ் குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நில நிர்வாக ஆணையர் டாக்டர். கே.எஸ். பழனிசாமி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் ப. மதுசூதன் ரெட்டி, உள்பட அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

சென்னை,மே.15–

**சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் குடியிருக்கும் மக்களுக்குப் பட்டா கிடைப்பதில் இருந்த சிரமங்களை நீக்கி, பட்டா வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டதன் பேரில், ஓராண்டுக்குள் 1.38 இலட்சம் பட்டாக்களை திராவிட மாடல் அரசு வழங்கி இருக்கிறது.**

**இதன் தொடர்ச்சியாக, சென்னை, திருவொற்றியூரில் நடைபெற்ற அரசு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, கத்திவாக்கத்தைச் சேர்ந்த 1,500 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கி வாழ்த்தினார்.**

**அப்போது அவர், `உண்ண உணவு – உடுத்த உடை – இந்த வரிசையில் `இருக்க இடம்' எனும் அடிப்படைத் தேவையை மட்டுமின்றி, அந்த இடத்துக்கான மக்களின் சட்டப்பூர்வ உரிமைகளையும் நம்முடைய கழக அரசு நிலைநாட்டி வருகிறது. மேலும், இப்பகுதி மக்களுக்காக 18 ஆயிரம் பட்டாக்களைத் தயார் செய்யும் பணி நடைபெற்று வரும் நிலையில், விரைவில் அவற்றையும் வழங்கிடுவோம்' என்றும் குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

இன்று திருவொற்றியூர் தொகுதி, கத்திவாக்கத்தில் 1,500 பேருக்குப் பட்டா வழங்குவதன் மூலம், இந்த நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த கத்திவாக்கம் பகுதிக்கு, நான் பலமுறை வருகை தந்துள்ளேன். சென்ற வருடம்கூட ஃபெங்கால் புயல் வந்தபோது, கத்திவாக்கத்திற்கு வந்து, உங்களுடன் சேர்ந்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டோம்.

திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரைக்கும், எப்போதும் சொல்வதைச் செய்கின்ற அரசு நம் அரசு. முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் எப்போதுமே சொல்வார், `சொல்வதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்' என்று சொல்வார். ஆனால், நம் முதலமைச்சர் அவர்கள் சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்து சாதனை படைத்து வருகிறார்.

### வாக்குறுதி கொடுத்தார்

அந்த வகையில்தான் கடந்த மக்களவைத் தேர்தலின்போது, `சென்னையில் பல ஆண்டுகளாக பட்டா இல்லாமல் இருக்கின்ற மக்களுக்குப் பட்டா கொடுப்போம்' என்று நம் முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். அதற்காக நம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், ஒரு குழுவையும் நியமித்தார்கள். அந்தக் குழு இரவு, பகல் பாராமல் பல்வேறு பகுதிகளில் ஆய்வுசெய்து, இன்று ஒவ்வொரு பகுதியிலும் உள்ள பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை ஏற்படுத்தி, பட்டா கொடுக்க ஏற்பாடு செய்துள்ளது. அதன் அடிப்படையில்தான் சென்ற ஜூலை மாதம் மாதவரத்தில் கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 200 பேருக்கு, நானே நேரில் சென்று பட்டாக்களை வழங்கினேன்.

### 1,500 வீட்டுமனை பட்டாக்கள்

அடுத்து சோழிங்கநல்லூர் தொகுதியில் 2,000 பேருக்குப் பட்டாக்களைக் கொடுத்தோம். இந்த திருவொற்றியூர் தொகுதியிலும் கடந்த செப்டம்பர் மாதம் 2 ஆயிரத்து 120 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்களைக் கொடுத்திருக்கிறோம். அதைத் தொடர்ந்து சென்னையின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று பட்டாக்களை வழங்கியிருக்கிறோம். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நான் மற்றும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இதுவரை 1லட்சத்து 38 ஆயிரம் பட்டாக்களை கொடுத்து இருக்கிறோம். அதன் தொடர்ச்சியாக இன்றைக்கு 1,500 பேருக்கு வீட்டு மனை பட்டாக்களை வழங்க இருக்கிறோம்.

அதிலும் குறிப்பாக, நம் வடசென்னை அனல் மின் நிலையத்திற்கு இடம் கொடுத்தவர்கள் 400 பேருக்கு மாற்று இடங்கள் வழங்கப்படுவதற்கான பட்டா பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருந்தது. அதை கேள்விபட்ட நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், `உடனே அவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும்' என்று சொல்லிவிட்டார்கள். அதனடிப்படையில் இன்றைக்கு 35 வருடத்திற்கு பிறகு, அந்த 400 பேருக்கு இன்றைக்கு இந்த மேடையில் பட்டா வழங்கப்பட இருக்கிறது.

பொதுவாக, இருக்க இடம், உண்ண உணவு, உடுத்த உடை ஒவ்வொரு மனிதனுக்கும் இதுதான் அடிப்படையான தேவை. நம் திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதெல்லாம் ஆட்சி அமைக்கிறதோ, அப்போதெல்லாம் இந்தத் தேவைகளை நம் தலைவர்கள் பார்த்துப் பார்த்து நிறைவேற்றி வருகிறார்கள்.

### ஒரு படி அரிசி ஒரு ரூபாய்

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு படி அரிசி ஒரு ரூபாய்க்கு கொடுத்தார். அண்ணா நூற்றாண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு கிலோ அரிசியை ஒரு ரூபாய்க்குக் கொடுத்தார். அதுமட்டுமல்ல, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு மாதம் 5 கிலோ வரை விலையில்லா அரிசி கொடுத்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் உணவு பஞ்சம் இல்லை என்றால், அதற்குக் காரணம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய நுகர்பொருள் வாணிபக் கழகம்தான். உடுத்த உடை என்று வரும்போது, திராவிட இயக்கத்திற்கும், நெசவாளர்களுக்கும் மிக மிக நெருங்கிய தொடர்பு உண்டு. இன்றைக்கு நெசவுத் தொழில் உயிர்போடு இருப்பதற்குக் காரணமே, திராவிட முன்னேற்றக் கழக அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகள்தான்.

### `கலைஞர் கனவு இல்லம்'

இதில் மூன்றாவது முக்கியமான விஷயம் என்னவென்றால், இருக்க இடம் என்பது ஏழை, எளிய மக்களுக்கு வீடு கிடைக்க வேண்டும் என்று குடிசை மாற்று வாரியத்தை, இந்தியாவிலேயே முதன்முறையாக உருவாக்கியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதை நம் முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று மேம்படுத்தியிருக்கிறார்.

சென்னையில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் யாரும் வீடில்லாமல் சிரமப்படக்கூடாது என்று நம் முதலமைச்சர் அவர்கள் `கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தை நிறைவேற்றினார். அதன் மூலமாக வீடு இல்லாத தமிழ்நாட்டு மக்கள் லட்சக்கணக்கானோருக்கு வீடுகளைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

வீடு ஒவ்வொருவருக்கும் எவ்வளவு முக்கியமோ, அதே அளவு வீட்டிற்கான பட்டாவும் மிக மிக முக்கியம். பட்டாதான் உங்கள் வீட்டிற்கான சட்டப்பூர்வ உரிமை. அதைப் புரிந்துகொண்ட நம் முதலமைச்சர் அவர்கள், நம் திராவிட மாடல் அரசு அந்த உரிமையை இன்றைக்கு நிலைநாட்டி இருக்கிறது.

### நீங்கள் நிம்மதியாக தூங்கலாம்

சென்னையைப் பொறுத்தவரை 1970–களில் 1980–களில் வழங்கப்பட்ட வீட்டு மனைகளுக்குப் பல இடங்களில் பட்டா இல்லை. நிறைய தொழில்நுட்பக் காரணங்கள் இருந்தன. அதையெல்லாம் சரிசெய்து, இன்றைக்குப் பட்டாவைக் கொடுத்திருக்கிறோம். இவ்வளவு நாள் சொந்த வீடாக இருந்தாலும், பட்டா இல்லையே என்ற கவலையும், கலக்கமும் உங்களுக்கு நிச்சயமாக இருந்திருக்கும். ஆனால், இன்றைக்கு உங்கள் வீட்டில் நீங்கள் நிம்மதியாக தூங்கலாம்.

உங்களின் மகிழ்ச்சி, உங்களின் முகங்களிலேயே தெரிகிறது. நீங்கள் பட்டாவைத் தேடிப்போன காலம் மாறி, மக்கள் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், அலுவலர்கள் எல்லோரும் உங்களைத் தேடி வந்து, பட்டாக்களைக் கொடுத்திருக்கிறோம். இதன் மூலமாக, உங்களுக்கான அடையாளத்தை, முகவரியை நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் மட்டுமல்ல, நம் திராவிட மாடல் அரசு இன்றைக்கு எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறது.

### பல்வேறு திட்டங்கள்

மகளிரை எடுத்துக்கொண்டீர்கள் என்றால், அவர்களுக்கு `விடியல் பயணம் திட்டம்', கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், உயர்கல்வி படிக்கின்ற மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம், மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டம் என பல்வேறு திட்டங்களை நம் அரசு செயல்படுத்திக்கொண்டு இருக்கிறது.

1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. வருகின்ற ஜூன் மாதத்தில் இருந்து கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தில் புதிதாகவும் விண்ணப்பங்கள் பெறப்படும் என்று, நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

இப்படி நம் அரசு தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சியை, அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்கின்ற வகையில் அனைத்துத் திட்டங்களையும் நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறது. அந்த வகையில், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், வடசென்னை பகுதியை மேம்படுத்த 6 ஆயிரம் கோடி ரூபாய் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி இருக்கிறார்கள்.

நம் முதலமைச்சர் அவர்கள் வாரம் ஒருமுறையாவது இதே வட சென்னைக்கு வந்து பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்திருக்கிறார். முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி இருக்கின்ற பல்வேறு திட்டங்களால், செயல்பாடுகளால் இன்றைக்கு தமிழ்நாடு இந்தியாவிலேயே வளர்ச்சியில் நம்பர்-ஒன் மாநிலமாக உருவெடுத்து இருக்கிறது. நான் உங்களிடம் கேட்பதெல்லாம், நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களை, சாதனைகளை நீங்கள் நான்கு பேருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த திராவிட மாடல் அரசின் பிராண்ட் அம்பாசிடராக, மக்களாகிய நீங்கள் செயல்பட வேண்டும்.

### 18,000 பட்டாக்கள் தயார்

இன்றைக்கு 1,500 பட்டாக்களைக் கொடுத்திருக்கிறோம். இதோடு இது முடியப்போவ தில்லை. இந்தப் பகுதி மக்களுக்காக இன்னும் 18,000 பட்டாக்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. விரைவில், அதையும் உங்களிடம் நம் சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக கொடுக்க இருக்கிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த பட்டாக்களைத் தயார் செய்ய இரவு, பகல் பார்க்காமல் உழைத்துக்கொண்டு இருக்கின்ற நம் துறையின் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்களுக்கும், வந்திருக்கின்ற அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு துறைச் செயலாளர்கள், பட்டா வழங்குவதில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட குழு மற்றும் அந்தக் குழுவின் சிறப்பு அதிகாரி மதுசூதனன் ரெட்டி ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகள், பணியாளர்கள் அத்தனைப்பேருக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீட்டுமனை பட்டா பெற்ற அத்தனைப்பேருக்கும், அன்பையும், வாழ்த்தையும் மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் மாதவரம் சுதர்சனம், கே.பி.சங்கர், ஆர்.டி.சேகர், தாயகம் கவி, ஐட்ரீம்ஸ் மூர்த்தி, மருத்துவர் எழிலன், பிரபாகர்ராஜா, ஜோசப் சாமுவேல், எபினேசர், மாநகரத் துணை மேயர் மகேஷ்குமார், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அமுதா ஐ.ஏ.எஸ்., சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் ஐ.ஏ.எஸ்., நில நிர்வாக ஆணையர் டாக்டர்.பழனிச்சாமி ஐ.ஏ.எஸ்., நில அளவை மற்றும் நில வரித்திட்ட இயக்குநர் மதுசூதனன் ரெட்டி ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர் ரஷ்மி சித்தார்த் ஐ.ஏ.எஸ்., மாநகராட்சியின் வட்டாரதுணை ஆணையர் ரவி தேஜா ஐ.ஏ.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் கீதா, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதி தனியரசு உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா தெற்கு மற்றும் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்து கொண்டு நான்காண்டு சாதனைகளை எடுத்துரைத்து பேசினார். நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர் டி.சி.பத்மநாபன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இரா சிவஞானம், ஒன்றிய அவைத்தலைவர் சீ.சுப்பிரமணி, தலைமைக் கழக பேச்சாளர் செங்கை கெ.சந்தானம், மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் குமுதா குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.சுந்தரம், சந்தோஷ்காந்தி, வாலாஜா ஒன்றியக் குழுத் தலைவர் சேஷாவெங்கட், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.விநோத், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஒன்றியச் செயலாளர் எம்.சண்முகம், மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் வி.விஜியகுமார், பேரூர் செயலாளர் பெரியசாமி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சி.சக்திவேல், அவைத்தலைவர் ராதாகிருஷ்ணன், துணைச் செயலாளர் ஜான் ஜெயபால், ஊராட்சி மன்றத் தலைவர் நிர்மலா மோகன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஜெய்சுரேஷ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் முனைவர் கார்த்திக், தகவல் தொழில்நுட்ப அணி ஸ்ரீதர் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் கிளைச் செயலாளர் டில்லி (ஏ) முருகானந்தம் நன்றி கூறினார்.




பண்ருட்டி தெற்கு ஒன்றியத்தின் சார்பாக சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் காடாம்புலியூர் பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது. இக்கூட்டத்தில் சபா.பாலமுருகன், வி.ராஜா, அமைச்சர் சி.வெ.கணேசன், சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ., மு.விஜயரத்தினம், சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் சபா பாலமுருகன், ராஜா நெய்வேலி தொகுதி பார்வையாளர் தெய்வ.இளையராஜா தலைமை பொதுக்குழு உறுப்பினர் அறிவழகன், மாவட்டப் பிரதிநிதி ஜி.ஆர்.ஆடலரசன், ஒன்றிய துணைச் செயலாளர் செல்வகுமார், எம்.ஜி.ஆர். என்கிற லஷ்மி நாராயணன், ஜெகநாதன், ஒன்றிய பொருளாளர் ஐயப்பன், நகரச் செயலாளர் குருநாதன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் எம்.பி.சுரேஷ் மாவட்ட மருத்துவர் அணிய அமைப்பாளர் டாக்டர்.ராஜேஷ், ஒன்றிய துணைச் செயலாளர் சுமதி நந்தகோபால், என்.சுப்பிரமணியன் ஏழுமலை, அருள்ஜோதி, அன்பழகன், சதீஷ், கார்த்திகேயன், டாக்டர்.செந்தில் குமார், செந்தில் முருகன், கலைச்செல்வன், கருணாநிதி, பாலமுருகன், ஜெயவேல், ராஜேந்திரன், சுந்தரம் உள்பட பலர் பங்கேற்றனர். க.அன்பழகன் நன்றியுரை கூறினார்.